**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No.** **MC** No. 2 /2021
**Prosecution witness.** PW 1

Name : லாவண்யா

Father's Name: வெங்கடேசன்

Village : Religion:

Taluk : Age :

( Respondent absent. counsel filed petition u/s. 126 crpc. petition heard and allowed.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 03.11.2023

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர் மனுதாரர் தரப்பில்)**

**1.** நான் இதற்கு முன்னர் குறுக்கு விசாரணையின் போது சுமன்ராஜ் என்பவருடன் திருமணம் நடந்ததாகவும் அவர் மூலம் எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 30.11.2018 ஆம் தேதியில் வீட்டிலிருந்து காணாமல் போனதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகார் கவரப்பேட்டை காவல் நிலையத்தில் நிலைய குற்ற எண்.572/2018 என்று பதியப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் சுமன்ராஜ் என்பவருடன் செல்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2023 ல் தற்போது எனக்கும் சுமன்ராஜுக்கும் குழந்தை பிறந்துள்ளது என்றால் சரியல்ல.

2. எதிர்மனுதாரர் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் இந்து திருமண அசல் மனு 302/2019 விவகாரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவகாரத்து வழக்கு இடைக்கால மனு எண்.1/2022 ல் இந்து திருமணச் சட்டம் பிரிவு 24 ன் கீழ் ஜீவனாம்சம் கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதாவது ஒரு நீதிமன்றத்தில் தான் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு இரண்டு நீதிமன்றங்களிலும் ஜீவனாம்ச மனு தாக்கல் செய்ய முடியாது என்றாலும் அந்த காரணத்தினாலே நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. எனது குழந்தை பெயர் யாழிசை எனது குழந்தைக்கு 6 வயதாகிறது.

3. நான் திருமணத்திற்கு பின்னர் கல்லூரி படிப்பை தொடர்ந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கல்லூரி படிக்கும்போது கல்லூரியில் சுமன்ராஜ் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர் கல்லூரி படிக்கும் போதும் சுமன்ராஜ் என்பவருடன் காதல் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ள தேதியில்

சுமன்ராஜ் என்பவருடன் காணாமல் சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பின்னர் கல்லூரி படிக்கும் போது சுமன்ராஜ் என்பவருடன் ஏற்பட்ட உறவின் காரணமாக பிறந்த குழந்தை தான்  யாழிசை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எனது மகள் யாழிசை எதிர்மனுதாரருக்கு பிறக்கவில்லை என்று காவல் நிலையத்திலிருந்து குழந்தையை எடுத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு பிறந்த குழந்தை யாழிசை இல்லை என்றாலும் நான் இரண்டாவதாக இன்னொருவரை திருமணம் செய்து கொண்ட காரணத்தால் நான் ஜீவனாம்சம் பெற தகுதி இல்லை என்றாலும் குழந்தை சட்ட முரணான உறவில் பிறந்திருப்பதால் குழந்தைக்கும் எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல.

4. நான் தற்போது 6/88 பெருமாள் கோவில் தெரு, பன்னீர்வாக்கம் , சோழவரம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். மேற்படி முகவரியில் தான் என் தாயாரும் வசித்து வருகிறார். நான் பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் உண்மைகளை மறைத்து ஜீவனாம்சம் தாக்கல் செய்திருப்பதை சொல்லாமல் இங்கு தாக்கல் செய்துள்ளதாலும், இந்த நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்திருப்பதை பொன்னேரி சார்பு நீதிமன்றத்தில் மறைத்துள்ளேன் என்றால் இரு வழக்குகள் தாக்கல் செய்யும் நடைமுறை குறித்து எனக்கு தெரியாது. நான் ஜீவனாம்சம் தகுதி உடையவர் அல்ல என்றால் சரியல்ல. நான் ஒவ்வொரு வரியிலும் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.